Clr.No.19

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR**

| | | |
|---|---|---|
| **Calendar** | : | |
| **Miscellaneous** | : | |
| **Preliminary Register** | : | **Case No. CC/82/2018** |
| **Sessions** | : | |
| | | **Prosecution** |
| **Deposition of witness for** | : | **PW 1 / LW 1** |
| **Name** | .. | திரு. ஜீவிதா |
| **Father's/Husband's Name** | .. | திரு. ஜெகநாதன் |
| **Village** | | |
| **Taluk** | .. | |
| **Caste** | .. | |
| **Calling** | .. | |
| **Religion** | .. | |
| **Age** | .. | **38** |

**Date: 12/11/2025**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்

முதல் விசாரணை

1. நான் தற்போது 52/B S.Pகோயில் 1வது தெரு, திருவொற்றியூர் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். 29.08.2012 ம் வருடம் வேலூர் P.M.P தனலட்சுமி திருமண மண்டபத்தில் செந்தில்குமார் என்பவருடன் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது மாப்பிள்ளை வீட்டர்

ஹைஹ10 கார், 1. 5 லட்சம் ரொக்கம் மற்றும் 30 சவரண் எனக்கு 10 சவரண் மாப்பிள்ளைக்கும், 1.5 கிலோ வெள்ளி ஆகியவற்றை மாப்பிள்ளை வீட்டார் கேட்டு பெற்றார்கள். திருமணத்திற்கு பின்பு எனது மாமியார் என்னிடம் மற்றவர்கள் 100 சவரண் நகை போட்டு வருகிறார்கள் என்று கூறினார். எனது மாமியார் என்னிடம் தனது மகன் விருப்பப்பட்டர் என்ற ஒரே காரணத்திற்காக தான் உன்னை திருமணம் செய்து வைத்தோம் என்று சொன்னார். நான் டெல்லியில் வேலை செய்து வருகிறேன். திருமணத்திற்கான நான் 25 நாட்கள் விடுமுறை எடுத்து வந்தேன். மறுவீட்டிற்கு என்னுடைய மாமியார், நாத்தனார் ஆகியோர் எனது பெற்றோர்வீட்டில் வந்து தங்கியிருந்தார்கள். எனக்கு உடல் நிலை சரியில்லாத்தால் என்னால் உணவு பறிமாற முடியவில்லை அதற்காக எனது மாமியார் என்னிடம் சண்டை போட்டார். மண்ணிப்பு கேட்டால் மட்டும் தான் என்னை மறுபடியும் எனது மாமியார் வீட்டிற்கு அழைத்துச்செல்வேன் என்று கூறினார்கள். எனது கணவர் நான் பார்த்துக்கொள்கிறேன் என்று கூறியதால் நான் வேலூரில் உள்ள எனது மாமியார் வீட்டிற்கு சென்றேன். திருமணம் முடிந்த 25 நாட்கள் தான் எனது மாமியார் வீட்டில் இருந்தேன். அந்த 25 நாட்களும் எதற்கெடுத்தாலும் என்னுடைய மாமியார் மற்றும் நாத்தனார் இருவரும் சண்டைபோட்டு எனக்கும் எனது கணவருக்கும் இடையே உள்ள நல்ல உறவை கெடுக்க நினைத்தார்கள். விடுமுறை முடிந்து டெல்லிக்கு வேலைக்கு சென்று விட்டேன். பிறகு 1மாதம் கலித்து தலை தீபாவளிக்கு நான் வேலூருக்கு வந்தேன். 1 மாத இடைவெளியில் நான் கர்பமாக

இல்லை என்று என்னிடம் பிரச்சனை செய்தார்கள். 1 வராம் விடுமுறையில் இருந்து விட்டு மறுபடியும் நான் டெல்லி சென்றுவிட்டேன். பிறகு நான் கூறுக்கு சென்ற பிறகு அங்கு நான் கர்பமாக இருப்பது தெரியவந்தது . தல பொங்கலுக்கு என்னுடைய மாமியாரும், கணவரும் நீயே இங்கு வந்து விடு என்று சொன்னார்கள். நானும் கிளம்பி பங்ளூருக்கு வந்துவிட்டேன். நான் பிரையானம் செய்த்தால் எனக்கு இரத்தகசிவு ஏற்பட்டுவிட்டது. அப்பா அம்மாவும் என்னை பங்ளூருக்கு வந்தார்கள். அப்பாவும் அம்மாவும் உன்னை வந்து பார்கக்கூடாது என்று சொல்லி அவர்களை அனுப்பி வைத்துவிட்டார்கள். அவர்களே பார்த்துக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டார்கள். நான் மாத்திரைகள் எடுத்த்தால் என்னால் காலையில் எழுந்திருக்க முடியவில்லை அதனால் என்னை திட்டுவார்கள். எனக்கு சாப்பாடு எல்லாம் சரியாக கொடுக்கமாட்டார்கள். எனது கணவர் வேலைக்கு சென்ற பிறகு என்னை அடித்து கொடுமை படுத்துவார்கள். என்னை மருத்துவர்கள் என்னை ரெஸ்ட் எடுக்க செல்லியும் என்னை தண்ணீர் எடுத்து வரச்சொல்வார்கள். தண்ணீர் எடுத்துவரச் சென்ற இடத்தில் தலையில் இடித்து கொடுமைபடுத்தினார்கள். அப்போது எனது கணவர் எனக்கு உதவியாக இருந்தார். மருத்துவமனை செலவுகளை நாங்கள் தான் பார்த்துக்கொள்ள வேண்டுமா என்று எனது கணவரிடம் கூறினார்கள். 6 வது மாதம் இரத்தக்கசிவு ஏற்பட்டது. நான் எனது அம்மா வீட்டிற்கு சென்று விடுகிறேன் என்று கூறியதற்கு எனது மாமியார்

ஒத்துக்கொள்ளவில்லை. பிறகு எனது கணவர் என்னை எனது அம்மா வீட்டில் கொண்டு வந்து விட்டார். அதன் பிறகு எனது கணவர் என்னை எனது அம்மா வீட்டிற்கு வந்து பார்க்கவில்லை. பிறகு குழந்தை பிறப்பதற்கு ஒரு வாரம் முன்னால் தான் எனது கணவர் சென்னையில் வந்து பார்த்தார். அதற்கு முன்னால் வளைகாப்பிற்கு பின்பு எனது மாமியார் வீட்டில் 1 வாரம் சென்று இருந்தேன். அப்போதும் எனது மாமியார் தங்க வளையல் வேண்டும் என்று கேட்டார். 1 ½ சவரணில் தங்க வளையல் போட்டார்கள். வலிவந்த்தும் எனது கணவருக்கு போன் செய்தன் அப்போது எனது கணவர் வேலூரில் இருந்து எனது அம்மா வந்ததும் தான் நீ மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்று கூறினார். நார்மல் டெலிவரி ஆக வேண்டியது எனது மாமியாரால் சிசேரியன் செய்ய வேண்டியதாகிவிட்டது. மாமியார், மாமனார், நாத்தனார் ஆகியோர் மருத்துவமனையில் என்னுடனேயே இருப்பார்கள். எனது அப்பா அம்மாவையும் என்னை வந்து பார்க்கவிடவில்லை. அவர்கள் செய்த டார்ச்சரால் குழந்தைக்கு பால் குடுக்கமுடியவில்லை. நடந்த விபரங்களை எனது கணவரிடம் சொன்ன போது எனது அம்மா சொற்படி கேட்டால் மட்டுடே என்னுடன் வாழ முடியும் என்றும் இல்லை என்றால் விவாகரத்து செய்து விடுவேன் என்றும் கூறினார். எனது கணவர் சென்னையில் படித்துக்கொண்டிருந்தார். நான் குழந்தையுடன் வேலூர் சென்று விட்டேன். அறுவைசிகிச்சை முடிந்த 3 வது மாதத்தில் எனது மாமியார் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அங்கு நடந்த பிறச்சனைகளை எனது

கணவரிடம் சொன்ன போது அம்மா சொல்வது போல் தான் நடக்க வேண்டும் என்று கூறி எனது கணவரும் அடிக்க ஆரம்பித்துவிட்டர். நான் குழந்தைக்காகவும் எனது கணவருக்காகவும் டெல்லியில் இருந்து இடமாற்றம் பெற்று பங்களூருக்கு வந்து விட்டேன். எனது மாமியார் என்னையும் எனது கணவரையும் நிம்மதியாக வாழவிடவில்லை. எனது கணவர் IITயில் படித்துக்கொண்டிருந்த்தால் எனது குழந்தையை பிடுங்கிக்கொண்டு என்னை ஹாஸ்டலில் தனியாக தங்க வைத்தார்கள். பாங்ளூரில் வந்து வேலை பார்க்கும் போது எனது கணவர் எனது ATM கார்டை பிடுங்  கொண்டார்.  என்னுடைய செலவுக்கு என்னுடைய பழைய ATM கார்டை வைத்துக்கொண்டு தான் என்னுடைய வாழ்வாதாரத்தை பார்த்துக்கொண்டேன்.  குழந்தையும் என்னை அம்மா என்று கூறாமல் அத்தை என்று தான் சொல்ல சொன்னார்கள்.  அந்த வீட்டில் எந்த உரிமையும் இல்லாமல் ஒரு அடிமை போல் தான் இருந்தேன். எனது கணவரும் நானும் பங்ளூரில் ஒன்றாக வாழ ஆரம்பித்தோம் பின்னிட்டு அவர்கள் செய்யும் கொடுமை அதிகமானது. வேலையை விடச்சொன்னார்கள். அது சம்பந்தமாக நான் என்னுடைய தகப்பனாருக்கு தகவல் தெரிவித்தேன். நான் எனது அப்பாவிற்கு போன் செய்த்தால் எனது கணவர் போனை தட்டிவிட்டு எனது கணவர் என்னை அடித்தார். எனது அப்பாவிற்கு பதற்றம் ஆகிவிட்டது. எனது மாமியார் உன்னை சாவடிச்சிடுவேன். உங்கள் வீட்டில் இருந்து வந்து கேட்டால் வயிற்று வலியால் இறந்து விட்டதாக கூறிவிடுவோம் என்றார்கள்.  இது பற்றி காவல் நிலையத்தில் நான் புகார் அளிப்போன்

என்று சொன்ன போது எனக்கு காவலர்களை தெரியும் என்றார் அவர் காவல் துறையில் வேலை செய்தவர்கள் என்று சொல்லி மிரட்டினார்கள். எனது குழந்தையை என்னிடம் தந்துவிடுங்கள் என்று கேட்டபொழுது எனது மாமியாரும் நாத்தனாரும் எனது முடியை பிடித்து அடித்து எனது குழந்தையை ரூமிற்குள் வைத்து பூட்டி தேவிடியா என்று சொல்லி அடித்தார்கள். மறு நாள் எனது அப்பா, அப்பா எனது அண்ணன்கள் ஆகியோர் வந்து கேட்ட பொழுது அவர்களையும் அசிங்கபடுத்தி வீட்டைவிட்டு வெளியே அனுப்பிவிட்டார்கள். அதிலிருந்து கொடுமைகள் இன்னும் அதிகமானது. வாரத்திற்கு 200 ரூபாய் தான் கொடுப்பார்கள். பஸ் பாஸ் மட்டும் தான். கிழிந்த ஆடையுடன் தான் பணிக்கு சென்று வந்தேன். இதை தொடர்ந்து எனது கணவர் என்னை சந்தேகப்பட ஆரம்பித்தார். அனைவரும் என்னை கேள்வி கேட்டார்கள். சமைக்க தெரியாதா என்று சொல்லி சப்பாத்திக்கட்டையால் அடித்தார்கள். எனக்கு எதுவும் தெரியாது என்று நானே நினைத்துக்கொண்டு சாகவேண்டும் என்று மன உலைச்சலுக்கு ஆளானேன். எனது அப்பாவிற்கு உடல்நிலை சரியில்லை என்று சொன்னார்கள். நான் அப்பாவை பார்ப்பதற்கு கேட்டேன் ஆனால் அவர்கள் விடவில்லை. நான் எனது கணவரிடம் கூறிவிட்டு ஆபிஸில் இருந்து சென்னைக்கு வந்துவிட்டேன். என்னை திரும்பவும் வீட்டில் விடுவதற்காக எனது அப்பா, அம்மா, அண்ணன்கள் பங்ளூருக்கு வந்தார்கள். என்னை வீட்டில் சேர்காமல் என்னுடைய குழந்தையை காண்பிக்காமல் என்னை தகாத வார்த்தைகளால் பேசி

என்னை அனுப்பிவிட்டார்கள். பிறகு 10 மாதம் கழித்து எனது நாத்தனார் கல்யாணத்திற்கு வேலூர் சென்ற போது எனது குழந்தையை அழைத்துக்கொண்டு வந்துவிட்டேன். அதன் பிறகு நான் எனது கணவரிடம் பேசவில்லை. 2017ம் வருடம் மார்ச் மாதம் தேதி ஞாபகம் இல்லை என்னுடைய கணவர் வீட்டார்கள் திருவொற்றியூருக்கு வந்தார்கள். அப்போது நான் அங்கு இல்லை. எனது குழந்தை என்னுடைய அப்பா அம்மாவுடன் இருந்தது. குழந்தையை பார்ப்பதற்காக எனது கணவர் வீட்டிற்குள் சென்றுள்ளார் குழந்தையை தூக்கிக்கொண்டு எனது கணவர் வெளியே செல்லவேண்டும் என்றதால் அப்பா அனுமதிக்கவில்லை. எனது அப்பாவை அடித்து எனது மாமனார் குழந்தையை கேட் வழியாக குழந்தையை எனது மாமனாரிடம் எனது கணவர் கொடுத்துவிட்டார். எனது அப்பாவிற்கு கையில் காயம் ஏற்பட்டுவிட்டது. நான் எனது அப்பாவை அடித்தாலும் எனக்கு குழந்தையை எடுத்துச்சென்றதால் தான் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். (புகார் மனு அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை** :-

29.08.2012 அன்று தான் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். திருமணம் முடிந்த பின்பு 25 நாள் தான் கணவர் வீட்டாருடன் வாழ்தீர்கள் என்றால் சரிதான். தீபாவளிக்கு நவம்பர் மாதம் முதல் தேதியில் வீட்டிற்கு சென்றீர்கள் என்றால் சரிதான். டிசம்பர் மாதம்

நீங்கள் கர்பமாக இருந்தீர்கள் என்றால் சரிதான். தீபாவளியின் போது 10 நாட்கள் தான் வீட்டில் இருந்தீர்கள் என்றால் சரிதான். 6வது மாதம் இரத்தக்கசிவு இருந்த்தால் நான் என்னுடைய அம்மாவீட்டிற்கு சென்று விட்டேன் என்றால்சரிதான்.2013 ல் தான் உங்களுடைய கணவர் IITயில் சேர்ந்தார் என்றால் சரிதான். குழந்தை 20.08.2013ல் தான் பிறந்தது என்றால் சரிதான். குழந்தை பிறந்தபின்பு இரண்டு மாதம் நான் என்றுடைய தாயார்வீட்டில் இருந்தேன் என்றால் சரிதான். குழந்தை பிறந்த பின்பு கணவர் பணிமாறுதலில் டெல்லியிலிருந்து பெங்ளூரு சென்றுவிட்டார் என்றால் நான் தான் பணிமாறுதலில் வந்தேன். நீங்கள் வேலூருக்கு எப்போது வந்தீர்கள் என்றால் 20.10.2013 அன்று வந்தேன் அங்கு 6 மாத காலம் இருந்தேன். பின்னிட்டு 3 மாத காலம் டெல்லியில் இருந்தேன். விடுமுறை நீட்டிப்பு செய்த காலத்தில் பெங்களூரில் இருந்த விடுதியில் தங்கியிருந்தீர்கள் என்றால் இல்லை.

22.03.2014 அன்றிலிருந்து 31.05.2014 வரை டெல்லியில் இருந்தீர்கள் என்றால் சரிதான். அப்போது கணவர் IIT சென்னையில் படித்துக்கொண்டிருந்தார்.

28.10.2015 அன்று கடைசியாக கணவரிடமிருந்து பிரிந்து உங்களது பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டீர்கள் என்றால் சரிதான். அந்த சமயத்தில் உங்களது கணவர் அங்கு இல்லை என்றால் சரியல்ல. அங்கு தான் இருந்தார்.

நான் நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சொன்ன விஷயத்தை தான் என்னுடைய புகார் மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் அதை தான் சொல்லியுள்ளேன்.

துன்புறுத்தல்கள் சம்பந்தமாக பெங்களூர் காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுத்துள்ளீர்களா என்றால் இல்லை. காயச்சான்றுகள் ஏதேனும் காவல் நிலையத்தில் கொடுத்துள்ளீர்களா என்றால் இல்லை.

செந்தில் குமாரின் தங்கை திருமணத்திற்கு சென்ற போது குழந்தையை நீங்கள் பறித்துக்கொண்டு வந்துவிட்டீர்கள் என்றாலும் அது சம்பந்தமாக அவர்கள் சத்துவாச்சேரி காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தார்கள் என்றால் சரிதான்.

அது சம்பந்தமாக காவல் நிலையத்திற்கு நீங்கள் சென்றீர்களா என்றால் SP அலுவலகம் சென்றேன். அதன் பின்பு அவர்கள் திருவொற்றியூர் வந்த போது அவர் தாக்கப்பட்டதாக H8 காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த சம்பவம் நடந்த போது நான் பெங்களூரில் இருந்தேன் என்றால் சரிதான். பின்னிட்டு நான் சென்னை வந்து H8 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

புகார் மனுவிற்கு பின்பு என்னுடைய கணவருடன் சேர்ந்து வாழ்வதற்காக குடும்ப நல நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டு அது தள்ளுபடி செய்யப்பட்டு கணவரால் தாக்கல் செய்யப்பட்ட விவாகரத்து மனு அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்த மனுவில் பத்தி 10ல் என்னுடைய அன்பான கணவருடன் சேர்ந்து வாழ விரும்புவதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

பெங்களூரில் நடந்த எந்த ஒரு சம்பவத்திற்கும் எந்த ஒரு ஆதாரங்களையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தற்பொழுது உங்களுடைய கணவருடன் சேர்ந்து வாழ சம்மதமா என்றால் இல்லை. நான் சொன்னது போல் எந்த ஒரு சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் போலீசார் சொல்லிகொடுத்தின் பேரில் நான் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குடும்ப வாழ்க்கையில் மாமனர். மாமியார். நாத்தனார் ஆகியோர் எந்த ஒரு கொடுமையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் திருமணத்திற்கு கொடுத்த பொருட்களை எல்லாம் திரும்ப பெற்றுவிட்டோம் என்றால் கொடுத்த பொருட்களை திரும்ப பெற்றுவிட்டேன். என்னால் பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

K KARTHIK Digitally signed by K KARTHIK Date: 2025.11.12 15:05:06 +0530

**நீதித்துறை நடுவர்,**

**திருவொற்றியூர்**